# செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம்

(மூலமும் உரையும்)



Dr.சே.சிவசண்முகராஜா M.D.(S)

உ

# செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம்

உரை எழுதிப் பதிப்பித்தவர்

*சித்தமருத்துவ கலாநிதி*

**Dr. சே. சிவசண்முகராஜா**

B.S.M.S (S.L.), M.D(S) (India)

சிரேஷ்ட விரிவுரையாளர்,

சித்தமருத்துவத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நூலகத்திலுள்ள 29,135,169ஆம் இலக்க தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து பதிப்பிக்கப்படுகிறது.*

# பதிப்புத் தரவுகள்

நூற்பெயர் :- செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம்

பதிப்பாசிரியர் :- Dr.சே.சிவசண்முகராஜா
B.S.M.S(Hons), (S.L), M.D(S) India

முதற்பதிப்பு :- வைகாசி, 2012

பதிப்புரிமை :- பதிப்பாசிரியருக்கு

ISBN :- 978 - 955 - 53216 - 7 - 9

அச்சுப்பதிப்பு :- சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்டேர்ஸ்,
பலாலி வீதி, கோண்டாவில்.

பக்கம் :- VIII + 20

விலை :- 70/=

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | நாகங்களின் சிறப்பு | 01 |
| 02. | நாகங்களின் பெயர்கள் | 02 |
| 03. | குட்டியீனுதல் | 02 |
| 04. | பல் முளைத்தல் | 03 |
| 05. | நஞ்சுண்டாதல் | 04 |
| 06. | அரவுகுலம் | 04 |
| 07. | வாழிடம், உணவுமுறை | 05 |
| 08. | கண், படம் முதலியன | 06 |
| 09. | விடப்பற்கள் | 06 |
| 10. | பாம்புகளின் தெய்வம் முதலியன | 08 |
| 11. | கடிக்கும் திதி, நாள், நட்சத்திரம் | 09 |
| 12. | அமுதகலை, விஷகலை | 11 |
| 13. | கடிக்கும் நேரம் | 12 |
| 14. | பற்பட்ட குறி | 15 |
| 15. | கடித்த பாம்பறிய | 15 |
| 16. | தூதன் குறி | 16 |
| 17. | பரீட்சித்தல் | 19 |
| 18. | சிகிச்சை முறை | 20 |

## தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் - ஆய்வின் நோக்கம்

இலங்கையில் பண்டைக் காலத்திலிருந்து பல சித்த மருத்துவ நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுட் சில, பல தசாப்தங்களுக்கு முன்னர் அச்சிடப்பட்டுள்ளன. பல இன்னமும் அச்சிடப்படாமல் ஏட்டுச்சுவடிகளில் செல்லரித்தும், உழுத்தும், அழிந்துபோய்க் கொண்டிருக்கின்றன.

அச்சில் ஒரேயொரு பதிப்பை மட்டும் கண்டுள்ள முற்கூறிய நூல்களிற் பெரும்பாலனவை பாடல்களாக மட்டும் வெளியிடப் பட்டுள்ளதுடன் பாடல்களுக்கான பொருளுரை ஏதுமின்றி தற்கால வைத்தியர்களால் பொருள் விளங்கிக் கொள்வதில் சிரமமாக உள்ளதுடன், பூரணமற்ற பதிப்புக்களாகவும் உள்ளன.

இக் குறைபாடுகளை இயன்றவரை நிவர்த்திக்கும் நோக்குடன் முதற்படியாக யாழ் பல்கலைக்கழக பிரதான நூலகத்திலுள்ள ஏட்டுச்சுவடிகளை ஆய்வுசெய்து இதுவரை அச்சில் வெளிவராத நூல்களை இனங்கண்டு அவற்றைப் பொருளுரையுடன் வெளியிடுவதுடன் ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட நூல்கள் தொடர்பாக, கிடைக்கும் ஏட்டுச்சுவடிகளுடன் ஒப்புநோக்கி தவறுகளைத் திருத்தியும் விட்டுப்போன பகுதிகள் இருப்பின் அவற்றைச் சேர்த்தும், பாடல்களுக்குப் பொருளும், தேவையான விளக்கவுரைகளும் எழுதி வெளியிடும் நோக்குடனும் இந்த ஏட்டுச்சுவடிகள் ஆய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஏட்டுச்சுவடி இலக். 29, 135, 169 ஆகியவற்றை ஆராய்ந்து செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம் என்னும் இந்நூல் முதற்தடவையாகப் பதிப்பிக் கப்படுகிறது.

# செகராச சேகரம் - சர்ப்ப சாஸ்திரம்
# அறிமுகம்

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் பல சித்தமருத்துவ நூல்கள் தொகுக்கப்பட்டும், புதிதாக எழுதப்பட்டுமுள்ளன. பரராசசேகர வைத்தியம், செகராசசேகர வைத்தியம் அங்காதிபாதம், பரராசசேகர நயனவிதி, செகராசசேகரம் - சர்ப்ப சாஸ்திரம் போன்ற நூல்களும் வேறும்பல நூல்களும் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் ஆக்கப்பட்டுள் ளன. இவற்றுள் செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம் இதுவரை அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள் 29, 135, 169 இலக்க ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்தபோது 29, 169 இலக்க ஏட்டுச் சுவடிகள் செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம் என்னும் பெயரிலும், 135 ஆம் இலக்க ஏட்டுச்சுவடி அமுதாகரம் - விஷவைத்தியம் என்ற பெயரிலும் இருந்தன. மேலும், 29, 169 இலக்க ஏட்டுச்சுவடிகள் செகராசசேகரம் - சர்ப்ப சாஸ்திரத்துடன் சித்தராரூடம் - தெரிகவி, அமுதாகரம் ஆகிய விட வைத்திய நூல்களையும் அடக்கியிருந்தமை கண்டறியப்பட்டது. 135ஆம் இலக்க ஏட்டுச்சுவடி முதல் இரு செய்யுட்கள் செகராசசேகரம் - சர்ப்ப சாஸ்திரத்துக்குரியனவாகவும் ஏனையவை அமுதாகரம் நூலுக்குரியன வாகவும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண விஷவைத்தியத்தில் மேற்படி மூன்று நூல்களும் அக்காலத்தில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் இதிலி ருந்து தெரியவருகிறது.

செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம் - செகராசசேகர மன்னன் பெயரைத் தாங்கியுள்ள இந்நூல் செகராசசேகர வைத்தியத்தின் ஒரு பகுதியாகவும் இருத்தல் கூடும். இந்நூலின் ஆசிரியர் யார் என்று தெரியா விட்டாலும் இந்நூலில் செகராசசேகரமன்னன் புகழ் 5, 8, 10, 34ஆம் பாடல்களில் பாடப்பட்டுள்ளது. பொதுவாக யாழ்ப்பாண அரசர் காலத்தில் எழுந்த தமிழ் மருத்துவ நூல்கள் நல்லூர் இராசதானிக் காலத்தன என்று கூறுவர். ஆனால், பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற நூல்களில் நல்லூர் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. அதேவேளை சிங்கைநகர் ஆரியர்கோன் என்று யாழ்ப்பாண மன்னர்கள் இந்நூல்களில் புகழப் பட்டுள்ளனர். அது போலவே செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரத்திலும் செகராசசேகரமன்னன் சிங்கைநகர் ஆரியர்கோன் (பாடல்- 8) என்றே

புகழப்பட்டுள்ளான். எனவே இந்நூல்கள் சிங்கைநகர் இராசதானி காலத்தில் உருவாகியிருக்கலாம் என்பதே ஏற்புடையது. அந்தவகையில் இந்நூல் இற்றைக்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகி யிருத்தல் எண்ணத்தகும்.

யாழ்ப்பாண மன்னர்கள் இராமேசுவரத்துடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாக அவர்கள் சேதுமன்னர் என்றும் அழைக்கப்பட்டனர் என்று திரு.க.குணராசா அவர்கள் எடுத்துக் காட்டி யுள்ளார். இந்நூலில் பாடல் 10 இல் சேதுவேந்தன் என்று செகராசசேகரன் குறிப்பிடப்படுவதுடன் பாடல் 8 இல் இலங்கைவேந்தன் என்றும் குறிப்பிடப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது.

செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம் என்ற இந்நூலானது காப்புச் செய்யுளுடன் 35 செய்யுட்களைக் கொண்டதாகவும் அந்தாதி முறையில் அமைந்தும் உள்ளது. 29 ஆம் இலக்க ஓலைச்சுவடியில் 21 - 27 வரையி லான பாடல்களைக் கொண்ட ஓர் ஓலை மட்டும் காணப்படவில்லை. இரு சுவடிகளிலும் பாடல் 5 இல் கடைசி இரண்டு வரிகள் மட்டும் தெளிவின்றி யுள்ளன. 27ஆம் பாடலில் ஒரு வரிகாணப்படவில்லை. ஆயினும் பொருள் காண்பதில் இவற்றால் அதிக பாதிப்புகளில்லை. இரண்டு சுவடிகளையும் ஒப்புநோக்கி திருத்தமான முறையில் இந்நூலைப் பதிப்பிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் சர்ப்பங்களின் தோற்றம், சாதி, வாழ்விடங்கள், உணவு, படத்தின் தன்மை, விடப்பற்கள், அதைக்குறிக்கும் தெய்வங்கள், கடிக்கும் இடம், நேரம், நாள், நட்சத்திரம், திதி, அமுதகலை, விடகலை, தூதன் இலட்சணம், குறி போன்ற விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சிகிச்சை முறைகள், மந்திரங்கள் பற்றி விரிவாக எதுவும் எடுத்துக் கூறப்படவில்லை. காரணம் அவை குரு உபதேச மூலம் அறியப்பட வேண்டும் என்பதாக இருக்கலாம்.

விஷத்தை மந்திரத்தால் இறக்க (நீக்க) முடியுமா? என்று பலரும் கேட்கலாம். முற்காலத்தில் விஷக்கடி வைத்தியர்களின் வேலை விஷமிறக்கும் மந்திரங்களை ஜெபித்து உருவேற்றிக் கொண்டிருப்ப தாகும். ஒருவருக்குப் பாம்பு கடிக்குமிடத்து அவ்விதம் உருவேற்றி வைத்திருக்கும் மந்திர சக்தியினால் அவ்விஷத்தை உடனடியாகவே இறக்கி விடுவர். அவ்விதம் செய்தபின் அவர்களின் சக்தி குறைந்துவிடும். எனவே அவர்கள் மீளவும் தமது மந்திர ஜபத்தில் ஈடுபட்டவண்ண

மிருப்பர். இது ஒரு தவமாக அவர்களால் செய்யப்பட்டு வந்தது. அவர்கள் இதுதவிர வேறு தொழில்களில் ஈடுபடுவதும் கிடையாது. அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை ஊர்மக்கள், அரசர் முதலானோர் செய்து கொடுப்பது வழக்கம். தற்காலத்தில் அவ்விதம் உலக நன்மை கருதி வாழ்தல் அரிது என்பதால் மந்திரத்தால் விஷமிறக்குதல் என்பதும் நம்புதற்கரிய விடயமாகவே உள்ளது. ஆயினும் மந்திரத்துக்குச் சக்தி யுண்டு என்பது விஞ்ஞான ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒன்றாகும். பாம்புகளில் நாகபாம்பு மட்டுமே மந்திரத்துக்குக் கட்டுப்படும் என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

சர்ப்ப சாஸ்திரத்தில் மருத்துவத்துடன் சோதிடமும் இணைந்து செயற்படுவது குறிப்பிடத்தக்கது. நாள், நட்சத்திரம், திதி, அமுதகலை, விடகலை , பஞ்சபட்சிகள் போன்ற விடயங்கள் விஷக்கடியின் சாத்தியா சாத்தியத் தன்மையைப்பற்றி அறிவதில் துணை நிற்கின்றன. சித்த மருத்துவம் மணி மந்திர அவுடத வைத்தியமுறை என்று கூறப்படுவதில் மணி என்பது சோதிடத்தையும், மந்திரம் என்பது ஜப முறைகளையும், அவுடதம் என்பது மருந்துகளையும் சர்ப்பசாஸ்திரத்தில் குறிப்பிடப்படு வதாகக் கருதலாம்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்படி ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து பாடல்களுக்குப் பொருளும் தேவையான இடங்களில் மேலதிக விளக்கங்களும் என்னால் எழுதப்பட்டு இந்நூல் உங்கள் கரங்க ளில் சமர்ப்பிக்கப்படுகிறது. யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வெளிவந்த இந்த நூலைப் ஆராய்ந்து பதிப்பிக்க எனக்குச் சந்தர்ப்பமளித்த இறைவனுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு ஏட்டுச்சுவடிகள் ஆய்வில் என்னை ஈடுபடத்தூண்டிய யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர் களுக்கும், எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்கி எனது முயற்சிக்கு ஊக்கமளித்துவரும் யாழ்.பல்கலைக்கழக நூலகர் திருமதி.எஸ்.அருளானந்தன் அவர்கட்கும், நூலக உத்தியோகத்தர் திரு.எஸ்.நவநீதன் அவர்கட்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்தமருத்துவத்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.

Dr. சே. சிவசண்முகராஜா M.D (S)

# ஆசிரியரால் ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்ட நூல்கள்

1. கட்டு வைத்தியம்

2. சித்த மருத்துவ வாகடம்

3. சித்த மருத்துவ வாகடம் - II

4. செகராசசேகரம் – சர்ப்ப சாஸ்திரம்

5. பரராசசேகர நயனவிதி

6. கண்டிராசாவின் பேரில் நயனவிதி என்னும் இலங்கைச் சிங்க மன்னன் நயனவிதி

7. தமிழ் மருத்துவ அகராதி

## காப்பு

பொன்படைத்த மால்வரையைப் பூதலத்தைச் சேமமுடன்
தன் படத்தினால் மறைத்துத் தாங்கியே
தேன்படைத்த பைந்நாகராசன் பனுவலுக்கு
முன் பிறந்த கைநாகமா முகத்தோன் காப்பு

**பொருள் -** இலக்குமியை (பொன் - இலக்குமி) மலைபோலும் (வரை - மலை) மார்பிலே தாங்குகின்ற திருமாலையும், (நாம் வாழும் இந்தப் பூமியையும்) தனது படத்தினால் மறைத்துத் தாங்கி நிற்கின்ற பாம்பு களின் (பைநாகம் - பாம்பு) அரசனாகிய (ஆதிசேடன்) நூலுக்கு (பனுவல் -நூல்) யானைமுகத்தையுடைய (கைநாகம் - யானை) கணபதியே காப்பு.

## நாகங்களின் சிறப்பு

1. கார்கொண்ட மாலளித்த பிரமா மைந்தா
கருதிய வொன்பது பேர்கள் கதிர்பூநாகத்
தார்கொண்ட உடல் பருத்து நின்று வென்றுந்
தனித்தனி யாயிரம் படங்கள் தாங்கி யோங்கிச்
சீர்கொண்ட தவசிகளாய்ச் சகலமாகிச்
செய்நன்றிகளை யறியுஞ் செய்கையோராய்ப்
பார்கொண்ட யோகிகளுமாகி யென்றும்
பணிபவர்க்கு வரமளித்துப் பணியும்பேரே

**பொருள் -** கரிய திருமாலின் உந்தியிலிருந்து தோன்றிய பிரமாவின் மைந்தரான தக்ஷப்பிரஜாபதி தனது பதின்மூன்று புத்திரிகளைக் கச்யப முனிவருக்குத் திருமணஞ் செய்து கொடுக்க அவர்களுள் கத்ரு என்பவ ளிடமிருந்து ஆதிசேஷன், வாசுகி முதலாக 1000 பாம்புகள் பிறந்தனவாம். அவற்றுள் கீழ்கூறப்படும் ஒன்பது நாகங்கள் முக்கியமானவை. அவை ஒவ்வொன்றும் உடல் பருத்து நின்றும் தனித்தனி 1000 படங்கள் தாங்கி சிறந்து விளங்குவதுடன் தவசிகளாகவும், செய்ந்நன்றி அறிபவர்களாக வும், யோகிகளாகவும், சகலமாகவும் விளங்கி நின்று தம்மைப் பணிபவர் களுக்கு வேண்டும் வரங்களையும் அளிக்கின்றன. அப்பணிகளின் பெயர் களாவன :-
(பணி - பாம்பு)

## நாகங்களின் பெயர்கள்

2. பேரிவர்க்குச் சேடனுட னனந்தன் தக்கன்
பெருங்குளிகன் கார்க்கோடன் வாசுகி பத்மன்
மூரிருக்கும் மகாபத்மன் சங்கபாலன் றனி
முதலாஞ் சேடனெழு தரணி தாங்கி
யேரிருக்கு மற்றவற் கெண்டிசை யுண்டாக்கி யிவர்
பேராலொன்பது பெண்ணிவருக்கென்றே
யாவருக்கும் கலியாணம் பிரமன் செய்ய
ஆடிமுதல் ஆவணியிலவர் சேர்வாரே

**பொருள்** - ஆதிசேடன், அனந்தன், தக்கன், குளிகன், கார்க்கோடன், வாசுகி, பத்மன், மகாபத்மன், சங்கபாலன், அதில் தனிமுதலாகச் சொல்லப்பட்ட ஆதிசேடன் பூமியை(தரணி)த் தாங்க (ஏழு தரணி என்ப தால் ஏழுலகங்களையும் என்றும் பொருள்) மற்ற நாகங்கள் எட்டுத் திசை களையுந் தாங்கி நிற்குமாம். பிரமாவானவர் இவ்வொன்பது பேர்க்கும் ஒன்பது பெண் (நாகங்களை)களைப் படைத்துத் திருமணஞ் செய்து வைத்தனராம். அங்ஙனம் மணமான பாம்புச்சோடிகள் ஆடி, ஆவணி மாதங்களில் கலவியில் ஈடுபடுவர் என்பதாம்.

**குறிப்பு** - உயிரினங்களின் தோற்றம் அல்லது படைப்புப்பற்றிப் பல கொள்கைகளுண்டு. அவற்றுள் சமயம் சார்ந்த கொள்கைகள் உயிரினங் கள் யாவும் கடவுளிடமிருந்து தோன்றியதாகக் கூறுகின்றன. எனவே பாம்புகளின் தோற்றம் படைத்தற் கடவுளான பிரமாவினால் படைக்கப் பட்டதாகக் கூறப்படுதல் வியப்பிற்குரியதன்று.

## குட்டியீனுதல்

3. சேரவிதிலொரு நூற்றொன்பது நாட் கெர்ப்பஞ்
சிறந்து தரித்திருநூற்று நாற்பதண்ட
மாரவிவை யிட்டெட்டு நாளதாக வடைகிடந்துயன்
றிருபதண்ட மேழுநாள்
பேருறவே பொரிக்கு மதிலாண்பால் முட்டை
பிச்சிப்பூ நிறமதாகத் திரழும் பெண்பா
னெருமுட்டை பாதிரிப்பூ நிறமதாகி
நீண்டிருக்கு மென்றுலகினியமிப்பாரே

**பொருள்** - அங்ஙனம் கலவியில் ஈடுபட்டதன் விளைவாகப் பெண்பாம்பு கருத்தரிக்கும். கர்ப்பகாலம் 109 நாட்களாம். (ஆடி, ஆவணியில் கருத் தரித்து கார்த்திகை மாதத்தில் முட்டையிடும் என்பது நூலோர் கருத்து.) ஒரு தடவையில் 240 முட்டைகளை (அண்டம் - முட்டை) இடும். எட்டு நாட்கள் அடைகாக்கும். அவ்விதம் அடைகாக்கும் போது பெருமளவி லான முட்டைகளை அது தின்றுவிடுமாதலால் 20 முட்டைகள் வரையி லேயே பொரிக்கும். ஆண்பால் முட்டைகள் பிச்சிப்பூ நிறமாகவும் உருண்டையாகவும் பெண்பால் முட்டைகள் பாதிரிப்பூ நிறமாகவும் சற்று நீண்டுமிருக்கும்..

**குறிப்பு** - பெரும்பாலான சர்ப்பசாத்திர நூல்களில் பெண்பாம்பு ஒரே தடவையில் இடும் முட்டைகளின் எண்ணிக்கை 248 என்றும், எட்டு நாட்கள் அடைகாக்கும்போது (ஏழுநாட்களுக்குள்) அவற்றுள் பலவற் றைத் தின்றுவிடும் என்றும் 16 முட்டைகளே பொரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

### பல்முளைத்தல்

4. நியமிக்கும் பன்னிரண்டாந்நாளின் ஞான
 நினைவுண்டாம் பதினான்காய் நின்ற நாளின்
நயமிக்க பகுவாய்ப் பல்முளைக்கும் பல்லு
 நன்றாகவே யெண்ணில் ஞாலமெங்குஞ்
செயமிக்க செகராச சேகரன் பொற்சேவடியை
 வணங்காமற்றிரிந்தார் நெஞ்சிற்
பயமிக்க பாரரசர்தானஞ்சிக் காட்டும் பல்லென
 முப்பத்திரண்டு பல்லாம் பண்பே

**பொருள்** - முட்டையிலிருந்து வெளிவரும் பாம்புக்குட்டிக்கு 12 ஆம் நாளில் ஞானநினைவுண்டாகும் என்றும், 14 ஆம்நாளிற்பல் முளைக்கும் என்றும் அங்ஙனம் முளைக்கும் பற்களின் எண்ணிக்கை 32 ஆம்..

**குறிப்பு** - பாம்புகளின் பற்களின் மொத்த எண்ணிக்கை 32 என்பது செகராசசேகர மன்னனின் பெருமையை எடுத்துக் காட்டுதற் பொருட்டுக் கூறப்பட்ட உவமை போலும்.

## நஞ்சுண்டாதல்

5. பண்பே யிருநாலுமுண்டாய்ப் பதினாறாகிப்
பகர் நாளிலாதித்தன் பரந்து தோன்றக்
கண்விழித்தாதித்தனையே கருதிப்பார்க்கக்
கருவுண்டாம் பொழுது காணும்
நஞ்சமெனப் பயிலு மெய்யிற்றடிறடியினிற்கு
முப்பத்தேழு நாளிற் செட்டைகழற்றிடுந்
மரலீங்குதன் பயிலும் தட்டுப்படா மட்டியபாற்றட்டுப்
பாடன்றி மேனி தளராதன்றே

**பொருள்** – 16 ஆம் நாளில் குட்டியானது கண் திறக்கும். அவ்விதம் கண் திறந்து சூரியனைப்பார்க்கும்போது நச்சுப்பற்களில் நஞ்சுண்டாகுமாம். மேலும் 37 ஆம் நாளிற் செட்டை கழற்றுமாம்.

**குறிப்பு** – இப்பாடலின் கடைசி இருவரிகளும் இருபிரதிகளிலும் மேற்கூறிய வாறு தெளிவற்றதாகவே காணப்படுகின்றன.

## அரவு குலம் / பாம்புச்சாதி

6. அன்றியி லரவு குலமுரைக்கிற் சேடனெனப்
போன்றிதானநாற்குலங்களாகி நிற்பான்
வென்றிபுனை யனந்தனுடன் குளிகன் வேதவிப்ராண
வாசுகி சங்கபாலன் வேந்தன்
வன்றிற் சேர்தக்கனுடன் பத்மன்றானும் வைசியனா
மீதன்றி மகா பத்மன்றானுந்
துன்று புகட் கார்க்கோடகனும் பின்னே
சூத்திரனென்றே புவியிற் சொல்லுவாரே

**பொருள்** – அனந்தன், குளிகன் ஆகிய இரண்டும் பிராமணசாதிப்பாம்புகள். வாசுகி, சங்கபாலன் ஆகிய இரண்டும் அரசசாதிப் பாம்புகள் (வேந்தன் - க்ஷத்திரியர் - அரசர்) தக்கன் , பத்மன் ஆகிய இரண்டும் வைசியசாதிப் பாம்புகள் (வைசியர் - செட்டி) மகாபத்மன், கார்க்கோடன் ஆகிய இரண்டும் சூத்திரசாதிப்பாம்புகளாம். (சூத்திரர் - உழவர்)

**குறிப்பு** – ஆதிசேடன் திருமாலின் படுக்கையாக அமைந்துள்ளதால் அது தெய்வசாதிப் பாம்பு என்றும் அது எல்லாச் சாதியினுள்ளும் அடங்கி நிற்கும் என்றும் கருத இடமுண்டு. பொதுவாக உயிரினங்களை வகைப்

படுத்தல் (classification) என்பது பழைய காலத்திலும் இருந்துள்ளது. தற்காலத்திலும் உள்ளது. பழையகால வகைப்படுத்தலில் (அக்கால சமூக அமைப்பில் மானிடரின் நால்வகை வருணப்பிரிவுகளைப்போல்) பிராமணர், அரசர், வைசியர், சூத்திரர் என்ற நால்வகையாகப் பாம்புகள் வகைப்படுத்தப்பட்டு, அவ்வவ் வருணங்களுக்கேற்ப பாம்புகளின் வாழிடம், உணவு, பழக்கவழக்கங்கள் என்பன எடுத்துக் கூறப்பட்டுள் ளன.

### வாழிடம், உணவுமுறை

7. சொன்ன பிராமணன் சிவாலயங்கடன்னிற்
 சுகத்துடனே யிருந்து புற்றாஞ் சோறும் பூவுந்
தின்னும் கிளர்ந்தே யாடின் மேற்பார்த்தாடுந்
 திசையரசன் மரங்களிற் சேர்ந்து வாழும்
பன்னு மெலி தவளை தின்றுமாடும் போதிற்
 பலதிசையும் பார்த்தாடும் பரிந்தே செட்டி
நென்னிறை பொன்வீடுறையு மறுகின் வேரும் நிறை
 வண்டுந் தின்றாடில் நேரே பார்க்கும்

பொருள் - பிராமணசாதிப்பாம்புகள் சிவாலயங்களில் வாழ்ந்து புற்றாஞ் சோறு, பூ முதலியவற்றைத் தின்பதுடன் ஆடும்போது மேல்பார்த்து ஆடு மாம். அரசசாதிப்பாம்பு மரங்களிற் சேர்ந்து வாழ்வதுடன் எலி, தவளை போன்றவற்றைத் தின்று வாழும். ஆடும்போது நானாதிசைகளையும் பார்த்தாடும். செட்டிச்சாதிப்பாம்பு நெல்லுள்ள (நெற்குதிர்) இடங்களில் வாழ்ந்து அறுகின்வேர், வண்டு முதலியவற்றைத் தின்பதுடன் ஆடும் போது நேரே பார்த்தாடும்.

### இதுவுமது

8. பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற் பரிந்திருக்கு
 மிரையெடுக்கிற் பலவுந் தின்னும்
ஏருடனே முன் தானாடி பரமார் தமிழங்கு மணிமுடி
 புனையு மிலங்கை வேந்தன்
சீரிய பொன்னிறை யழகுச் செங்கோலோச்சும்
 செகராச சேகரமன் சிங்கை மேவும்
ஆரியர்கோன் வெண்குடையினிழலே செய்யும்
 அவனிதனைப் பார்த்து நின்றே யமர்ந்தாடுமே

**பொருள்** - சூத்திரசாதிப்பாம்பு புற்றுக்களில் வாழ்வதுடன் பலவித உணவுகளையும் உண்ணும். அது ஏருக்கு முன்னர் ஆடும். அவ்விதம் ஆடும்போது பூமியைப் பார்த்து (கீழ்நோக்கி) ஆடும்.

**கண், படம் முதலியன**

9. மேலான பிராமணன் கண்ணொடுங்கிப் புள்ளி
மிகைத்த படம் நேர்ந்திருக்கும்
விரும்பு வேந்தர் காலாலக் கண்சிவந்து
படமும் புள்ளியாற் பெருக்கும்
நிறையுரை போலழகதான கோலருஞ் செட்டிக்கு
வெளுத்த கண்ணு மங்குலப் படமும் புள்ளியாமே
குறுகித் தோன்றும் நாலான சூத்திரன் கண்கறுத்துப்
புள்ளி நற்படமும் நீண்டிருக்கு ஞாலமீதே

**பொருள்** - பிராமணசாதிப்பாம்பின் கண் ஒடுங்கியும் படம் புள்ளி மிகைத்தும் நேராயும் இருக்கும். அரசசாதிப்பாம்பின் கண் ஆலம்பழம்போற் சிவந்தும் படம் புள்ளியாற் பெருத்துமிருக்கும். செட்டிசாதிப்பாம்பின் கண் வெளிறியும் அங்குலப்படத்திற் புள்ளியுமிருக்கும். சூத்திரசாதிப்பாம்புக்கு கண் கறுத்தும் புள்ளி நீண்ட படமும் இருக்கும்.

**விடப்பற்கள்**

10. தேடுமிவர் தேவியர்க்குமிந்த வண்ணஞ் சிறந்தொக்கும்
படத்தொருபாற் சிறுத்துத் தோன்று(ம்)
மா(ஆ)டுபுருடன் படமு மிருபா லொக்கும்
வாதிக்கும்வேளை பலியறிந்து நல்கும்
சூடெயிறு நாலதன் பேர் தகரி யென்றுஞ்
சூளக மகரி காளாத்திரி யமதூதி நாளுந்
தொடு தமிழ் நால் வேதச் சேதுவேந்தன்
தேவரெனக் காற்றருந்தித் திரியுமன்றே

**பொருள்** - அது போலவே பெண்பாம்புகளுக்கும் கண்கள், படம் முதலியன இருக்கும். ஆனால் பெண்பாம்புகளின் கண், படம் முதலியன ஆண் பாம்பிலும் பார்க்கச் சிறுத்திருக்கும். மேலும் நாகபாம்புகளுக்கு நான்கு நச்சுப்பற்களுண்டு. (எயிறு - பல்) அவை தகரி, மகரி, காளாத்திரி, யமதூதி என்பனவாம்.

**குறிப்பு -** சில விஷக்கடி நூல்களில் நச்சுப்பற்களின் பெயர் காளி, காளாத்திரி, நீலி, நீலகண்டி என்றும் வேறு சிலநூல்களில் காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்றும் கூறப்பட்டுள்ளன. ஆயினும் நச்சுப் பற்கள் நான்கு என்பதில் மாறுபாடில்லை.

11. அவை நல்லபாம்புடனே புடையன்
புள்ளியர விரியன் கருவழலை
அவைகணாலு மொன்றெனஞ்சுறையடுத்துப்
பன்றாய் மேலுமுயரறுபத்தொரு சாதியாகத்
துவை விஷமுள்ளதொன்று கடித்ததென்றாற்
சொன்னதெண்ணிக் கண்டு கொண்டு
நாற்சாதிக்கு மின்னது மந்திர மவுஷதந் தியான
மிவை யடுத்த சாதிகட்குமிவை மீளுமே

**பொருள் -** (இங்ஙனம் கூறப்பட்ட பாம்புகள்) நல்லபாம்பு (நாகபாம்பு), புடையன், விரியன், கருவழலை என நான்குமாம். அந்நச்சுப் பாம்புகள் மேலும் அறுபத்தொரு சாதியாகவிரியும். அவற்றுள் எதாவதொரு விஷப் பாம்பு கடித்ததென்றால் அதை இனங்கண்டுகொண்டு அவ்வவற்றுக்குக் கூறப்பட்ட மந்திரங்கள், அவுடதம், தியானம் முதலியவற்றால் பரிகரிக்க விடம் நீங்கும்.

**குறிப்பு -** பாம்புகள் பலநூற்றுக்கணக்கில் இருந்தாலும் அவை யாவும் குணவியல்புகளைப் பொறுத்து மேற்படி நான்கு சாதிகளுள் அடக்கப் படுகின்றன. எனவே அவற்றைச் சரியாக இனங்கண்டு அதற்குரிய மந்திரம், தியானம், அவுடதம் என்பவற்றைப் பிரயோகிக்க வேண்டும். தற்காலத்திற்கூட கோவில்களில் வாழும் நாகங்களைக் கோவில் நாகம் என்று கூறி அதை எவரும் துன்புறுத்துவதில்லை. அந்நாகமும் வலிந்து யாரையும் தீண்டுவதில்லை. அதுபோலவே சீற்றமிகு நாகத்தை ராஜநாகம் என்றும் செட்டிநாகம் என்றும் அழைக்கும் வழக்கமும் தற்காலத்தும் உள்ளது.

### பாம்புகளின் தெய்வம் முதலியன.

12. மீளும் பிராமணன்றனக்குச் செந்தீத் தெய்வம்
வேந்தனுக்கு இந்திரனாகும் மிக்க செட்டிக்கு
சூளுதவு வாயுபகவானே தெய்வஞ் சூத்திரற்கு
வருணனவன்றுணையாந் தெய்வம்
வாளையிறு தகரியினில் வேதன் றந்த மகரியில்
மால் காளாத்திரி வாய்த்த பல்லில்
ஆளவரு மீசானி யமதூதி பல்லினணி
யிமைத்தோ னிறைவனாங் கடந்தே

**பொருள்** – பிராமணசாதிப்பாம்புக்கு அக்கினி (செந்தீ - அக்கினி)தெய்வம். அரசசாதிப்பாம்புக்கு இந்திரன் தெய்வம். செட்டிச்சாதிப்பாம்புக்கு வாயு பகவான் தெய்வம். சூத்திரசாதிப்பாம்புக்கு வருணபகவான் தெய்வம். மேலும் தகரியில் பிரமாவும் (வேதன்), மகரியில் திருமாலும், காளாத்திரி யில் ஈசனும் (சிவன்), யமதூதியில் மகேஸ்வரனும் தெய்வமா இருப்பர்.

### இதுவுமது

13. இடக்கண்ணி லிந்திரனிருப்ப னெழில்சேர்
வலக்கண்ணி லிருப்ப னீசன்றேவி
கிடத்திய மேற்றானத்திற் கந்தன் சேர்வான்
கீழ்த் தானத்தில் வள்ளி கெணித்தே சேர்வள்
திடத்துடனாக் கைங்கரத்தோ னிடது பாகச்
செவியதனிற் பிராமணி வலச் செவிக்கே
மடக்கு வைரவனிற்குங் கடிக்கும் போதின்
மங்கை யோகினி கடித்தால் வன்னே

**பொருள்** – பாம்பின் இடது கண்ணில் இந்திரனும், வலக்கண்ணில் உமை அல்லது சக்தியும், வலப்பாகத்தில் (மேற்றானம்) கந்தனும், இடப்பாகத் தில் (கீழ்த்தானம்) வள்ளியும், நாக்கில் விநாயகரும் (ஐங்கரன்), இடது செவியில் காளியும் (பிராமணி), வலது செவியில் வைரவரும் தெய்வமாக இருப்பர். இதில் கடிக்கும் வேளையில் காளியும் (யோகினி), கடித்த பின்னர் வைரவரும் இருப்பர் என்பதும் குறிப்பு.

## கடிக்கும் திதி, நாள், நட்சத்திரம்

14. வன்மையி லொன்றாம் பக்க மாறாம் பக்கம் வளர்
 பதினொன்றாம் பக்க மிவை கடன்னில்
இன்னலுறு நாளாறு சேர் மகமுங் கூடிலிதில்
 மரண மிரண்டு பக்க மேழாம் பக்க
தென்னிறை பன்னிரண்டு பக்க மிவையில்
 வந்த திங்கள் புதனோடு மிருகசீரிடந்தான்
புன்மலிசா மூன்றெட்டுப் பன்மூன்றுக்கே
 பூரட்டாதியுங் கூடிற் பொல்லாச்சாவே

**பொருள்** - பிரதமை (ஒன்றாம் பக்கம்) , சஷ்டி (ஆறாம்பக்கம்),ஏகாதசி (பதினொன்றாம் பக்கம்) ஆகிய திதிகளில் மக நட்சத்திரமும் சேர்ந்த நாளில் பாம்பு கடித்தால் மரணமாம். (இங்கு வளர் பதினொன்றாம் என்று கூறப்பட்டிருத்தலால் வளர்பிறை பூர்வபக்கம் என்று கருதவும் இடமுண்டு.) துவிதீயை (இரண்டாம் பக்கம்), சப்தமி (ஏழாம்பக்கம்), துவாதசி (பன்னிரண்டாம் பக்கம்) ஆகிய திதிகளில் திங்கள், புதன் கிழமைகளில் மிருகசீரிடமும் கூடிய நாளில் பாம்பு கடித்தால் மரணமாம். அவ்விதமே திரிதியை (மூன்றாம் பக்கம்), அட்டமி (எட்டாம் பக்கம்), திரயோதசி (பதின்மூன்றாம் பக்கம்) ஆகிய திதிகளில் பூரட்டாதியுங் கூடிய வேளையிற் கடித்தால் பொல்லாச்சாவாம். (பக்கம் - பக்ஷம்)

## இதுவுமது

15. சாவாகும் பதினைந்தாம் பக்கந் தன்னிற்
 சனியுடனே ரேவதி நாடனுங் கூடில்
ஏவான நாலாறெட்டொன்பான் நன்னாலெனும்
 பக்கந் தன்னிற் செவ்வாய் சனியுமே யதில்
மூவாத கார்த்திகை நாட் பரணி சோதி
 மூலமொடு பூரட்டாதியுமே முன்னாட்
தேவரசுபதி விசாக மீசன் சென்ம மக
 மாயிலியஞ் சித்திரைக்கே

**பொருள்** - அமாவாசை / பௌர்ணமி (பதினைந்தாம் பக்கம்) திதியில் சனிக்கிழமையும் ரேவதி நட்சத்திரமும் கூடிய வேளையில் பாம்பு கடித்தாலும், சதுர்த்தி, அட்டமி, நவமி திதிகளில் செவ்வாய், சனிக்கிழமைகளில் கார்த்திகை, பரணி, சுவாதி, மூலம், பூரட்டாதி,, அசுவினி, விசாகம், உத்தரம், ஆயிலியம், சித்திரை .......

### இதுவுமது

16. சித்திரமாந் திருவேணத்துடனே செப்பு
முரோகணி கூடிற் செத்தாரென்க
பத்தியுடன் பிறந்தநாட் பத்தாநாளும்
பத்தொன்பதா நாளு மிருபத்து மூன்றாய்
மெய்த்திருபத்தைந்து பதினெட்டா நாளில்
மீளாது சங்கிரம முதலாய் நாலு
மித்தலத்திற் குளிகனுட னெட்டாம் பக்க மியம்பு
திங்கட் கிழமையினி லெட்டுஞ் சாவே

**பொருள் -** ......திருவோணம், ரோகிணி நட்சத்திரங்களில் பாம்பு கடித்தாலும் மரணமாம். பிறந்தநாள் (பிறந்த நட்சத்திரம்) அதற்கு 10, 19, 23, 25, 18ஆம் நாள் நட்சத்திரங்களிலும், மாதப்பிறப்பு (சங்கிரமம்), குளிகன், அட்டமி திதியிலும் திங்கட்கிழமையிலும் பாம்பு கடித்தால் மரணமாம்.
**குறிப்பு -** குளிகாதியர் அதாவது குளிகன், எமகண்டன், அர்தப்பிரகாரன், காலன் ஆகியோர் பற்றிய விபரங்களைச் சோதிட நூல்களில் பார்த்துத் தெரிந்து கொள்க.

### இதுவுமது

17. எட்டினுடன் பன்னிரண்டாம் பக்கமாறா
மெண்பக்கம் விஷயோகமென்ற நாளி
லோடுபிணி வியாழனொடு நாளுமுடல் மெலிவோனைக்
கடித்தாலுடனே சாவாம்
மட்டற நாற்சந்தியில் நீரோடுங் கங்கையின் கரையில்
மலைப் பொதும்பில் வரமாந் தேவர்
கிட்டியுறை யாலயத்திற் சுடலை மீதிற் கிளர்
நந்தவனத்திலராக் கிளர் கூடிடத்தே

**பொருள் -** அட்டமி, துவாதசி, சஷ்டி ஆகிய திதிகளில் விஷயோகமும் கூடினும், வியாழக்கிழமையிலும் உடல்மெலிந்தோனைப் பாம்பு கடித்தாலும் மரணமாம். மேலும் நாற்சந்தி,நதிக்கரை, மலைப்பொதும்பு (பொதும்பு பொந்து, குகை, சோலை), ஆலயம், சுடலை, நந்தவனம் ஆகிய இடங்களில் அரவு கடித்தாலும் ஆகாதாம்.

## அமுதகலை, விஷகாலை

18. கூட்டரிய கொடிதான பூமி தன்னிற் கோளரவு
கடித்திடுகிற் சொல்லு நன்மை
காட்டமுதகலை யதனிற் கடித்தான் மீளுங்
கருது விஷகலையதனிற் கடித்தான் மீளா
தாட்டமுதகலையும் விஷகலையும் நேராயறிதல்
பெருவிரல் புறந்தாழான கெண்டை
நீட்டுதாழ் துடை கொப்பூள் விலாவே மார்பு
நெற்றி கையடி கழுத்து நிரைப்பல்லாமே

**பொருள் -** கொடிய பூமி போன்றவற்றில் விஷப்பாம்பு தீண்டின் அஃது அமுதகலையாயின் மீளும். விஷகலையிற் கடித்தால் மீளாது. அமுத கலை, விஷகலை என்பவற்றை அறியும்முறை காற்பெருவிரல், புறந்தாழ், கெண்டைக்கால், முழந்தாழ், தொடை, கொப்பூள், விலா, மார்பு, நெற்றி, மணிக்கட்டு (கையடி), பல் .......

## இதுவுமது

19. பல்லாரு மதரங்கள் நெற்றி யுச்சிப் பதினைந்தாம்
தானத்தி லொன்றாம் பக்கம்
புல்லாரெண் பதினைந்தாம் பக்கமட்டும் புருடர்
வலக்காலிற் பெருவிரற்கே போது
மில்லான வமுதகலை யுச்சி தன்னி லிடக்காலில்
விரலமுதமெழின் மாதர்க்கே
யல்லாரு மபரபக்கத் திறங்குமிந்த வமுத நின்ற
நிலைகேளில் விடமதாமே

**பொருள் -** உதடுகள், சிரசு, உச்சி ஆகிய பதினைந்து தானங்களில் பிரதமை முதல் பௌர்ணமி வரையும் புருடருக்கு (ஆண்களுக்கு) வலதுகாற் பெருவிரல் முதலாகவும், பெண்களுக்கு இடதுகாற் பெருவிரல் முதலாகவும் தினமும் அமுதகலை நிற்கும் ஸ்தானங்களாம். அபரபக்கத் தில் அத்தானங்களை மேலிருந்து கீழாக அதாவது உச்சியிலிருந்து காற்பெருவிரல் வரை எண்ணுவது விடகலையாகும். ?

## கடிக்கும் நேரம்

20. ஆகமுதல் விடகலையே பிறபக்கதுக் கப்படியே
யிறங்குவது புருடர்க்குத்தான்
வாகினுடனிடப் பக்கம் பெண்களுக்கு
வலப்பக்கத்தினிலேறு மற்றைப் பக்கம்
வேகமுடனப்படியே மாறிக்கொள்க விடிந்து
பதினைந்து நாழிகைகண்மீதே
தோகை நல்லாய் கடித்தால்
ராசசூத்திரன்றானெனில
பற்றிவிடமேறுந் துணிவு பெற்றே

**பொருள்** – இவ்விதமே அபரபக்கத்தில் ஆண்களுக்கு இடப்புறமும், பெண் களுக்கு வலப்புறமும் அமுதகலை ஏறுமாம். மேலும் விடிந்து 15 நாழிகைக்குள் (6மணித்தியாலங்கள்) அரசபாம்பு கடித்தால் விடம் வேக மாக ஏறும்.

## இதுவுமது

21. பெற்ற பதினைந்துக்குப் பின்றுடங்கிப் பெரும்
பொழுது படுமளவுபெறக் கடித்தால்
அற்றைவிட மாங்கிஷத்தைப் பற்றியேறு மரவு
குலஞ் செட்டியதாங் கத்தமித்தே
நற்று பதினைந்துக்குட் கடித்த பாம்பு
நாதியான வென்பு பற்றி நஞ்சுமேறும்
உற்று பதினைஞ்சளவுங் கடித்த பாம்பு
முன்னூலோன் விடமேறு முனைப்புற்றே

**பொருள்** – பகல் பதினைந்து நாழிகையிலிருந்து பொழுதுபடுமளவுக்குள் (அதாவது பகல் 12 மணிமுதல் மாலை 6 மணிக்குள்) சூத்திரசாதிப்பாம்பு கடித்தால் அதன் விடம் மாங்கிஷத்தைப்பற்றி (தசை) ஏறும். செட்டிச் சாதிப்பாம்பு சூரிய அஸ்தமனத்திலிருந்து 15 நாழிகைக்குள் கடித்தால் அதன் விடம் எலும்பைப்பற்றி ஏறும். எஞ்சிய 15 நாழிகைக்குள் (அதாவது நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணிக்குள்) பிராமணசாதிப்பாம்பு கடித்தால் (முன்னூலோன் - மூன்று நூலோன் - பிராமணன்) விடம் முனைப்புற்றேறும்.

### இதுவுமது

22. உற்ற சனிக்கிழமை யிராவிருபதாக வோங்கிய
வெய்யோன் விடிந்து முப்பதோடே
சொற்ற பத்து நாழிகையினளவு தாதுஞ்சூழ
(அ)னந்தனேவலினாற் கடிக்கும் பாம்பு
நாற்று விடங் காலினிற்குஞ் சொன்ன வந்த
நாளிரா விருபது நாழிகையுந் திங்கள்
பெற்ற பகலிரவு செவ்வாய் கன்னல் பத்தும்
பேணும் வாசுகி யேவக் கடிக்கும் பாம்பே

**பொருள்–** சனிக்கிழமையில் இரவு 20 நாழிகை(8 மணி) , விடிந்து 20 நாழிகையளவில் (30 - 10 = 20 ) (அனந்தன் என்னும் பாம்பின் ஏவலி னாலே) கடிக்கும் பாம்பின் விடம் காலில் நிற்கும். திங்கட்கிழமை இரவு 20 நாழிகையும், பகல் 20 நாழிகையும் (வாசுகி ஏவலால்) கடிக்கும் பாம்பின் விடம் (நரம்பைப் பற்றியும்), செவ்வாய்க்கிழமை 10 நாழிகையும் **(கன்னல் - நாழிகை)** .......

### இதுவுமது

23. பாம்பின் வாய்நரம்பினிற்குஞ் செவ்வாய் மபான
புகர் புதனில் நாற்பது நாழிகையும் பற்றி
மெய்மையடவே கார்க்கேடனேவலாலரவங் கடிக்க
நீக்கு பிடர் நெஞ்சிற்கே
யாம் புதனிலிருபது நாழிகை சென்று பத்து
நாழிகையும் பற்மனேவலாலே
தேமரவங் கடித்த விடங் கண்டந் தன்னிற்
செறிந்து நிற்கும் வெள்ளி சனி சிறப்புக்கேளே

**பொருள் –** திங்கட்கிழமை கடிக்கும் பாம்பின் விடம் நரம்பைப் பற்றியும், செவ்வாய்க்கிழமை கடிக்கும் பாம்பின் விடம் அபானத்தைப் பற்றியும் நிற்கும். புதன்கிழமை 40 நாழிகைக்குள் (கார்க்கோடன் ஏவலினால்) கடிக்கும் பாம்பின் விடம் பிடர், நெஞ்சைப்பற்றி நிற்கும். புதனிலிருபது நாழிகை சென்று (வியாழக்கிழமை ? ) 10 நாழிகைக்குள் (பற்மன் ஏவலி னால்) கடிக்கும் பாம்பின் விடம் கண்டத்தைப்பற்றி நிற்கும்.

### இதுவுமது

24. சிறந்த வெள்ளி பகலிரவு சனி வாரத்திற்
சேர்ந்த முப்பது நாழிகையுஞ் சேர்
மறஞ்செய் பற்மனற் றேவலாலே வாளரவங்
கடிக்கின் விடமருவு மூக்கினிறைந்த
சனியிரவிலைந்து நாழிகைக்கே நின்ற
வராக் கடித்திடுகில் நிகரில்லாமற்
பிறந்த சங்கபாலன்றானேவலாகும் பெருகு
விட முச்சி நெற்றி பெற நிற்குமே

**பொருள் -** வெள்ளி பகலிரவும், சனிக்கிழமையிலும் (மகாபற்மன் ஏவலி னாலே ஏற்கெனவே பற்மன் பெயர் கூறப்பட்டமையால் இங்கு கூறப்படு வது மகாபற்மனாக இருக்கவேண்டும்) கடிக்கும் பாம்பின்விடம் நாசியைப் பற்றி நிற்கும். சனிக்கிழமை இரவு 5 நாழிகைக்குள் (சங்கபாலன் ஏவலினால்) கடித்த பாம்பின் விடம் உச்சி, நெற்றியைப் பற்றி நிற்கும்.

### இதுவுமது

25. நின்ற சனிக்கிழமை யைந்து நாழிகைக்குள்
நற்பத்து நாழிகையுங் குளிகனேவ
லென்றரவு கடிக்க விடமுச்சி தன்னிலேறி நிற்கும்
நாழிகை தானெண்ணிக் கண்டே
துன்று விடமக்கினியிற் றுரும்புபோலத் தூயதாக
மிடமதுவாஞ் சொன்ன வண்ண
மயன் றிவைக் குற்றதெல்லா முபதேசத்தால றிந்திடுக
பெரியோர்க ளருளினவாறே

**பொருள் -** சனிக்கிழமை 5 நாழிகை, 10 நாழிகைக்குள் (குளிகன் ஏவலால் / தக்கன் ஏவலால்) கடித்த பாம்பின் விடம் உச்சியைப் பற்றி நிற்கும். இங்ஙனம் கிழமைகளில் நாழிகைகளை எண்ணி விடம் ஏறி நிற்கும் இடங்களைக் (அக்கினியிற்றுரும்பு போல என்பதால் - தூயவிடம் என்று கருத்து) கண்டறிந்து கொள்க. இவை பற்றிய விளக்கத்தை குருவிடமிருந்து உபதேசம் பெறுவதே முறை.

## பற்பட்ட குறி

26. அருந் தகரியென்னும் பல்லுப் பட்டாறயுண்வரையற
வட்டப் பட்டெண்ணை பொசிந்துாறி பொல்லாங்
கரிந்த வுளர் மகரி யென்னும் பல்லுப்பட்டாற்
காக்கைக் கால் போற் சிதறிக் காணுஞ் சென்னீ
ரருந்திடுங் காளி யெயிறுான்றிற் றென்றாற்
செப்பிடு நாற்கோணங் கறுப்பே சோரி
முருந்துறள் காளாத்திரி பற்பட்டாற் கோண மூன்றிற்
தனி மரிசனம்போன் முந்துந்தானே

**பொருள் –** தகரி என்னுப் பல் பட்டால் சங்குபோற் குறியும் (வரை கோடு - சங்கு), எண்ணெய்க்கசிவும் (நீர்க்கசிவென்றும் கூறுவர்) காணப்படும். முகரி என்னும் பல் பட்டால் காக்கைக் கால் போற் சிதறியும், செந்நீர்க் கசிவும் காணப்படும். காளி என்னும் பல் பட்டால் நாற்கேணமும் காரிரத்தக்கசிவும், காளாத்திரி என்னும் பல் பட்டால் முக்கோணக்குறியும் மஞ்சள் நிற நீர்க்கசிவும் காணப்படும்.

**குறிப்பு –** சில நூல்களில் காளி என்னும் பல் பட்டால் புள்ளடி போற் குறியும் பன்னீர் போல் விடநீர்க்கசிவும் காணும் என்றும், காளாத்திரி பல் பட்டால் முக்கோணக் குறியும் மஞ்சள் நிற விடநீர்க்கசிவும் இருக்கும் என்றும் நீலி பல் பட்டால் முள்தைத்தது போற்குறியும் செந்நீர்க்கசிவும் காணப்படும் என்றும், நீலகண்டி பல் பட்டால் விற்குறியும் கழுநீர் போல விடநீர்க்கசிவும் காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## கடித்த பாம்பறிய

27. முந்த வொருவனைப் பாம்பு கடித்த தென்றால்
முக்கண்ணனாந் திசைமுதல் நாளெட்டதாக்கி
அந்த வடகிழக்கில் நல்ல பாம்பதாகும்
அதற்கருகு விரியன் அதற்கருகு கருவழலை
வந்திடுகிற் கோண முதல் நல்ல பாம்பை
வைத்தெண்ணிப் பாம்பொளுங்கின வகையைக் காணே

**பொருள் –** ஒருவரைப் பாம்பு கடித்ததென்றால் வடகிழக்குத்திசை முதலா கக் கொண்டு (முக்கண்ணன் திசை - ஈசானம் - வடகிழக்கு) எட்டாகப் பிரித்து வடகிழக்கில் நல்லபாம்பு என்றும், அதற்கருகில் விரியன் என்றும்,

அதற்கடுத்து கருவழலை என்றும் கொண்டு ஒழுங்குபடுத்தி என்ன பாம்பென்று கண்டுகொள்க.

**வடக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| | நல்ல பாம்பு | விரியன் | நல்ல பாம்பு | |
| **மேற்கு** | கருவழலை கிழக்கு | | விரியன் | **கிழக்கு** |
| | விரியன் | நல்ல பாம்பு | கருவழலை | |

**தெற்கு**

**தூதன் குறி**

28. காணவந்தோன் விழுதல் தலை விரித்துப் போத
கை முறுக்கிப் பிணைதல் காலோடு கால் தேய்த்தல்
சேணுறவே கைமேற்போக்க லெதிரே தள்ளல்
செய்திடுகிற் கடியுண்டான் செத்தானென்க
வீணுறவேயது வொளிந்தபடியே நிற்கின் மீளுநஞ்சு
மெய்யினி லோரிடத்திற் றொட்டால்
நாணுறவே பார்க்குதல் செய்தானேயாகில்
நச்சரவு கடித்த கடி நம்பிக் கொள்ளே

**பொருள்** – தூதனாக (வைத்தியரிடம்) வந்தவன் விழுதல், தலைவிரித்து நிற்றல் (முற்காலத்தில் ஆண்களும் குடுமி வைத்திருந்தனர்) கைகளைப் பிசைதல், காலோடு கால் தேய்த்தல், கையை உயரத்தூக்கல், எதிரே நீட்டல் செய்திடின் கடியுண்டவன் இறந்தான் என்க. பயத்தால் ஒளிந்தபடி நின்றால் நஞ்சு மீளும். உடம்பிலோரிடத்திற்றொட்டால் வெட்கத்துடன் பார்த்தால் நச்சுப்பாம்பு கடித்தது என்க.

**இதுவுமது**

29. நம்பி வந்தான் சொன்ன வார்த்தை தன்னை நாடி
யெழுத்தெண்ணிக் கெண்டுற்று நீக்கி
தம்பலமென வைந்தினாற் கழித்துத் தள்ளித்
தானின்ற வெழுத்தொன்று தானேயானால்

வெம்பகுவாய் நல்ல பாம்பென்று காண்க மிகுந்
திரண்டு மூன்று நாலென மிஞ்சிற்
கம்ப மிகு பெரும்புடையன் விரியன் நீண்ட
கருவழலை யென்றறிக கருத்தினாலே

**பொருள்** - தூதாக வந்தவன் முதலிற் சொன்ன வார்த்தையை (அதிலுள்ள எழுத்துக்களை) எண்ணி, அதை ஐந்தினாற் கழித்து (பிரித்து என்பாருமுண்டு) மிஞ்சிய எழுத்து ஒன்றானால் கடித்தது நல்லபாம்பு, இரண்டானால் - கடித்தது புடையன், மூன்றானால் - கடித்தது விரியன், நான்கானால் - கடித்தது கருவழலை என அறிந்து கொள்க.

**இதுவுமது**

30. நாலன்றி யஞ்செழுத்தாகி நின்றால் நஞ்சுளது
கடித்ததல்ல நாலினாலே
யோலமெனக் கழித்த வெழுத்தொன்று நின்றால்
ஒரு பல்லா மிரண்டெழுத்துக் கிரண்டு பல்லாஞ்
சால மூன்றெழுத்தாகிற் றந்த மூன்றாந் தக்க
நாலெழுத்தெனிற் றந்த நாலாம்
மேலு மூன்றதிற் கழித்தே கண்ட சேட
மெய்திய தொன்றெனிற் கடித்தல் மின்னார்க்கே

**பொருள்** - நாலென்றில்லாமல் ஐந்தெழுத்தாக நின்றால் நச்சுப் பாம்பு கடித்ததல்ல என்க. மேற்கூறியபடி கூட்டிய எழுத்தை நாலினாற் கழித்தால் (பிரித்தால்) எஞ்சிய எழுத்து ஒன்றாக இருந்தால் - ஒரு பல், இரண்டாகவிருந்தால் - இரண்டு பல், மூன்றாக இருந்தால் - மூன்று பல், நான்காக இருந்தால் - நான்கு பல் பட்டதெனக் கூறுக. மேலும் மேற்கூறிய எழுத்திலிருந்து மூன்றைக் கழிக்க வருவது ஒன்றானால் கடித்தது பெண்ணுக்கு என்றும்,

**இதுவுமது**

31. மின்னு மிரண்டெழுத்தாகிற் புருடர் தன்னை
விடப்பாம்பு கடித்ததென்க மீண்டு
முன்னே சொன்ன திரண்டிற் கழித்தோரெழுத்தேறிற்
றுய்ய விடபாக மிரண்டெழுத்துத் தோன்றின்

மன்னு வலப்பக்கமுறக் கடித்ததென்க மற்றது
மூன்றிற் கழித்ததொன்றே யேறில்
இன்னவை தோல்பற்று மிரண்டெழுத்தேறிலிவை
தசை மூன்றெழுத்தேல் நஞ்சேறப்பெற்றானே

**பொருள் –** இரண்டாயின் ஆணுக்கென்றும் கூறுக. மேலும் இரண்டைக் கழிக்க வருவது ஓரெழுத்தாயின் (ஒன்றாயின்) இடப்பாகத்திற் கடித்த தென்றும், இரண்டாயின் வலப்பாகத்திற் கடித்ததென்றும் கூறுக. மேலும் மூன்றிற் கழித்தது ஒன்றாயின் தோலைப்பற்றி நஞ்சேறும் என்றும், இரண்டாயின் தசையைப் பற்றியேறும் என்றும் மூன்றாயின் உடல் முழுவதும் நஞ்சேறப் பெற்றான் என்றும் கூறுக.

**இதுவுமது**

32. தானாகி வருதூதன் சொன்ன வார்த்தை தன்னில்
முதலெழுத்தகரந் தானேயாகில்
நானெற்கும் பெரும்புடையன் இகாரமாகில்
நல்லபாம்பென்றறிக உகரமாகிற்
கானொக்குங் கருவழலை எகரமாகிற் கருவிரியன்
ஒகரஞ் சில்விடமே காட்டும்
மானே கேள் ஆ ஈ ஊ ஏ ஓ வென்று வரிற்
பிசகு நஞ்சமென மனத்திலெண்ணே

**பொருள் –** தூதன் வந்து முதலிற் சொன்ன வார்த்தையின் முதலெழுத்து அ'காரமாகில் - பெரும்புடையன், இ'காரமாகில் - நல்லபாம்பு, உ'காரமாகில் - கருவழலை, எ'காரமாகில் - கருவிரியன், ஒ'காரமாகில் - சில்விடம் என்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ வரின் பிசகு நஞ்சென்றும் அறிக.

**இதுவுமது**

33. எண்ணியிவை யிரண்டு வரில் நிமித்தமென்க விது
பொல்லாதாகில் விடமீளாதென்க
திண்ணிய பாம்பது கடியுண்டோன்றன் வீட்டிற்
சென்றவனைப் பார்த்துக் கண்டுன்னிச் சென்றால்

விண்ணுறவே சீவனது போனதென்க விடமொதுங்கி
யொருபுறமே மிகக்கடந்தான்
நண்ணி யந்தப்புறமாகுஞ் சீவனகமுறுக்கிற்
சிவந்திருக்கு நயந்து முன்னே

**பொருள்** - தூதன் சொன்ன வார்த்தை இரண்டாகவரின் நிமித்தம். இது பொல்லாதாகில் விடமும் மீளாதென்க. பாம்பு கடியுண்டோனது வீட்டிற் சென்று அவனைப் பார்க்கும்போது கண்விழி பிதுங்கினால் இறந்து விட்டான் என்க (துன்னுதல் - பிதுங்குதல்) விடமொதுங்கி ஒரு புறமாகக் கிடந்தானெனில் அந்தப்பக்கமாகச் சீவன் தெளிவின்றி (அகமுறுகி) யிருக்கும் என்க (?)

## பரீட்சித்தல்

34. முன்கையினிற் சுட்டிடிற் கொப்புளமதாகின் முகமுறக்
கண்ணீர் விழுகின் முழமேழாகி
யொன்பதுற நீண்டு பதின்மூன்று சுற்றாயுகிர் வெளுத்து
விழி சிவந்திட்டுயர் வதனத்திற்
றென்பிறை போற்றுணை மருப்பும் தமர் வேந்தன்
செகராச சேகரமன் செங்கை யேந்து
மின்கிரணவுடை வாளையசைக்கப் போரில்
விழுமரசர் போலவுயிர் மெய்யிலுண்டே

**பொருள்** - பாம்பு கடியுண்டவனின் முன்கையில் தீயினாற் சுட்டால் கொப்புளமுண்டானால், முகத்தில் கண்ணீர் விழுந்தால், கை காலை நீட்டி முடக்கினால், நகம் வெளுத்து விழி சிவந்து காணப்பட்டால் உயிர் உடலில் உண்டு என்று கருதுக.

**குறிப்பு** - செகராசசேகர மன்னனைச் சரணடைந்த அரசர் உயிர் பிழைத்திருப்பது போல பாம்பினால் கடியுண்டவரும் உயிர் பிழைத்திருப்பர் என்பதாம்.

## சிகிச்சை முறை

35. உண்டாகு மொரு பல்லுப் பட்டதாகிலுற்ற தொரு
மந்திரத்தாலுடனே மீட்கக்
கண்டாலங் கிரண்டு பல்லுப் பட்டதாகிற்
கருத்தினால் மீட்கப் பற்களு மூன்றானால்
பண்டான மருந்துகளினால் மீட்க நான்கு
பற்பட்டால் மந்திரங் கருத்துப் பலமருந்தாற்
கொண்டாட மீட்கப் பல்லின் பேதமெல்லாங் குறித்த
சற்ப சாத்திரம் பொன்கொழிக்குங் கற்றாரே

**பொருள்** - பாம்பின் ஒரு பல்லுப்பட்டால் மந்திரத்தாலும், இரண்டு பல்லுப் பட்டால் பார்வை பார்த்தலினாலும் (கருத்து - பார்வை) , மூன்று பல்லுப் பட்டால் தக்க மருந்துகளினாலும், நான்கு பல்லுப் பட்டால் மந்திரம், பார்வை பார்த்தல், மருந்து ஆகிய மூன்றினாலும் மீட்க வேண்டும் என்பதாம்.

***செகராசசேகரம் - சர்ப்ப சாஸ்திரம் முற்றும்.***

**பிற்குறிப்பு :- பாடல் 8 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைக் கொண்டுள்ளது. இப்பாடலில் கூறப்படும் செகராசசேகர மன்னன் தென்னிலங்கை அரசர்களையும் வென்று இலங்கை வேந்தனாக ஆட்சி புரிந்தான் என்பதே அச் செய்தியாகும்.**

**இப்பாடலையே யாழ்ப்பாணச் சரித்திரத்தில் செ.இராசநாயகம் அவர்களும் "இலங்கைவேந்தர் சீரிய பொன்திறை யளக்கச் செங்கோ லோச்சுஞ் செகராசசேகர மன்னன் சிங்கைமேவு மாரியர்கோன்" என்று (பக்.69) தென்னிலங்கை அரசரைவென்று அவர்கள் திறை செலுத்த செகராசசேகரன் ஆட்சி செய்தான் என்று எடுத்துக் காட்டியுள்ளார்.**

**பாடலில் பாடபேதம் இருப்பினும் கருத்து ஒன்றாயிருத்தல் காண்க.**



ISBN 978 - 955 - 53216 - 7 - 9

Sivaranjanam Offset Printers, Palaly Road, Kondavil. T.P : 077 3068982